செய்தி வெளியீடு எண். 57 நாள். 26.01.2017

**68-வது குடியரசு தின விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

------------

68-வது குடியரசு தின விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து அரசு நலத்திட்ட உதவிகளை இன்று (26.01.2017) வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல்த்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, காவல்த்துறை அணிவகுப்பை பார்வையிட்டார். பின்னர் காவல் ஆயுதப்படை, தேசிய மாணவர் படை, சாரனர் ஆகியவர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டார்.

சுதந்திர போராட்ட தியாகிகளை கௌரவித்து, மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுககு இனிப்புகளை வழங்கினார். முன்னாள் படை வீரர்நலன், வருவாய்த்துறை மூலமாக முதலமைச்சரின் பொது நிவாரணம், உழவர் பாதுகாப்பு திட்டம், சமூக பாதுகாப்பு திட்டம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாவட்ட சமூக நலத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, மாவட்ட தொழில் மையம் ஆகிய துறைகளின் மூலமாக 116 பயனாளிகளுக்கு ரூ.11 இலட்சத்தி 54 ஆயிரத்து 305 -க்கான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வர்தா 2016 புயலின் போது சிறப்பாக பணியாற்றிய வருவாயத்துறை, பொதுப் பணித்துறை, சுகாதாரத்துறை. வேனாண்மை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய துறைகளை சார்ந்த 1877 அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், அலுவலக பணியில் சிறப்பாக பணியாற்றிய 159 அரசு அலுவலர்களுக்கும் பாராட்டி நற்சான்றிதழ்களை வழங்கினார்.

திருநின்றவூர் செயின்ட் ஜான்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கரையாஞ்சாவடி ஆர்.சி.எம்.உயர் நிலைப்பள்ளி, திருவொற்றியூர் அன்பாலயா மனவளர்ச்சி குன்றியோர்கான சிறப்பு பள்ளி, திருவள்ளூர் ஸ்ரீநிகேத்தன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சோழவரம் அரசு மகளிர் உயர் நிலைப்பள்ளி, அம்பத்தூர் பெருந்தலைவர் காமராஜர் அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளி, ஆவடி இமாகுலேட் இருதய மேரி மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளின் கலைநிகழ்ச்சிகளை பார்வையிட்டு அனைவருக்கும் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஈ.டி.சாம்சன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வி.மகேந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**